# மனுஷன் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்
# MAN HAS BECOME AS ONE OF US

**அறிமுகம்**

தேவன், கிறிஸ்தவர்களாகிய நம்மை எப்படிப் படைத்திருக்கிறார், ஏன் படைத்திருக்கிறார் என்று புரிந்துகொண்டோம். இதன் அடிப்படையில் ஒன்றாம், இரண்டாம் பாடங்களின் மீது நாம் விசுவாசம் வைக்கலாமா வேண்டாமா என்பதை நமது சொந்த அறிவைக்கொண்டு நாமே முடிவு செய்யலாம். ஒவ்வொரு முறை வேத வசனங்களை வாசித்து அவைகளுக்குரிய சந்தர்ப்பப் பொருளில் அவைகளை புரிந்துகொண்டு, அவைகள் மூலம் சொல்லப்படும் தேவனுடைய செய்திகளை நம்பும்படி முடிவு எடுக்கும் போதும், நாம் நமது விசுவாசக் கதவினை சிறிது விரிவாகத் திறக்கின்றோம். இச்செயல் நம்மைப் படைத்த தேவனோடு நமது வாழ்வினை ஒன்று சேர்க்கிறது. *1 யோவான் 4:15.* அதே சமயத்தில் வேத பாடங்களை கற்றுக்கொள்ள "மனுஷனுடைய ஞானத்தைச் சார்ந்திருக்கும்" அவசியம் நம்மை விட்டு விலகிவிடுகிறது. *1 கொரி. 3:20,21.* "சூரியனுக்குக் கீழே" உள்ள மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றிய கேள்விகளுக்கெல்லாம் தேவனுடைய வார்த்தையில் பதில்கள் இருக்கின்றன என்ற விசுவாசம் நமக்கிருந்தால், இந்த வாழ்க்கையை பற்றி அறியாத காரியங்களைக் கூட நாம் அறிந்துகொள்ளமுடியும். பொதுவாக, ஒரு துயர சம்பவம் நடந்த பின்பு, "என்ன தவறு நிகழ்ந்தது" என்று கேட்போம். அப்படிப்போல மனுக்குலத்தை தேவன் படைத்ததிலும் "என்ன தவறு நிகழ்ந்தது?" என்று கேட்கிறோம். தேவனுடைய சாயலின்படி படைக்கப்பட்டவர்களாயிருந்தும், அவருடைய ஆவியை உடைய அநேகர், மரணத்துக்கு ஏதுவாக பாவம் ஆளுகை செய்யும் "வாழ்க்கை பெட்டிக்குள்" இன்னமும் அடைபட்டுக் கிடப்பது ஏன்? *ரோமர் 5:21.* தேவன் தாம் படைத்ததை "மிகவும் நன்றாயிருந்தது" என்று கண்டும், அது அழியும்படி ஏன் விட்டுவிட்டார்? நிகழ்ந்த காரியங்களை எல்லாம் நாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.





*அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாளாயிற்று. இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. ஆதி. 1:31; 2:1.*

*தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி : நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும்* ***நன்மை தீமை அறியத்தக்க*** *விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில்* ***சாகவே சாவாய்*** *என்று கட்டளையிட்டார். ஆதி. 2:15-17.*

*தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஆதி. 3:1.*

*அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும்,* ***புத்தியைத் தெளிவிக்கிறதற்கு*** *இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். ஆதி. 3:6.*

*பின்பு தேவனாகிய* ***கர்த்தர்;*** *இதோ* ***மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்;*** *இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும். ஆதி. 3:22.*

*இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும்,* ***எல்லா***

**மனுஷரும் பாவஞ்செய்தபடியால்,** *மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. ரோமர் 5:12.*

ஆதாமும், ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்கவர்களாய் தேவனைப் போல் ஆனார்கள்; ஆகையால், மரணத்தின் மீது சாத்தானுக்கும் வல்லமை கிடைத்துவிட்டது. *எபி. 2:14.* தேவன் மனுக்குலத்தை ஏன் படைத்தார், எப்படிப் படைத்தார் என்பதெல்லாமே சாத்தானுக்குத் தெரியும். எதையாவது சாதிக்கவேண்டும் என்ற உள்ளுணர்வும், அதன்மூலம் மகிமை அனுபவித்து மகிழவேண்டும் என்ற உள்ளுணர்வும் ஆதாம் ஏவாளுக்கும் இருந்தன என்பதும் சாத்தானுக்குத் தெரியும்.

தேவன் படைத்த மக்களை பொய்களின் மூலமாகத் தன் வசப்படுத்த பிசாசானவன் செயல்படுகிறான். *யோவான் 8:44.* தேவன் விரும்புகின்ற வழியில் நடத்தும்படி இயேசு கிறிஸ்துவானவர் செயல்படுகிறார். அவரே "வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்" *யோவான் 14:6.* கிறிஸ்தவர்களாகிய நாம் படைக்கப்பட்டிருக்கின்ற நோக்கத்தையும், வாழவேண்டிய விதத்தையும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். இரண்டாம் பாடத்தைப் பாருங்கள். பல திறமைகளுடன் வளர்ச்சியடையும் ஜீவாத்துமாக்களுக்கு நன்மை, தீமை அறியத்தக்க அறிவு தான் முக்கியமான பிரச்சனையாக இருக்கின்றது. தேவனுடைய பிள்ளைகளாக வாழும்படி முதல் தம்பதியை தேவன் படைத்தார். பூமிக்குரிய சரீரங்களோடே அவர்களை உண்டாக்கினார். அவர்களுக்கு நன்மை, தீமை அறியத்தக்க அறிவு இருக்கவேண்டும் என்று அவர் விரும்பவில்லை. வாழ்க்கைக்கு எது நன்மை, எது தீமை என்பதை அறியும் ஆற்றல் பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் உண்டு. *நீதி. 15:3.* ஆயினும், ஆதாமைப்போல பூமிக்குரிய சரீரங்களில் அவர்கள் வாழ்வதில்லை. *யோவான் 1:18.* கிறிஸ்துவானவர் (மேசியா, எபிரெயு மொழியில்) மனிதனாக அவதரித்தார். அதாவது, அவர் "மாம்சத்தில் வந்தவர்." *1 யோவான் 4:2.* அவர் வந்தபோது நன்மை, தீமை இன்னதென்று அறிந்திருந்தார். ஆதாமைப் போன்ற சரீரத்தில்





இப்பேர்ப்பட்ட அறிவுள்ளவராக இருந்தபோதிலும், தேவனுக்குக் கீழ்ப்படிய அவர் **கற்றுக்கொள்ளவேண்டியதாய் இருந்தது**. கிறிஸ்தவர்களுக்கு ராஜாவாக வும், தேவனுக்குப் பிரதான ஆசாரியராகவும் தகுதிப்பெறும்படி கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ள அவர் பெருமுயற்சி எடுக்க வேண்டியிருந்தது. *எபி. 1:8,9; 5:7-10.*

**பாடம்**

"அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்து கொள்ளவும் "அறிகிறதற்கு முன்னே" என்று ஏசாயா, காலத்தைக் குறித்து அறிவித்தான். *ஏசாயா 7:16.* இயேசு குழந்தைகளைக் குறித்து இவ்விதமாய் பேசினார்: "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". *மத்தேயு 18:3.* இப்பொழுது தேவனுடைய ராஜ்யத்துக்கு உரியவர்களாக இருக்கும் கள்ளங்கபடமற்ற சிறுபிள்ளைகள் பெரியவர்களாகி இருதயத்திலும், மனதிலும், மனச்சாட்சியிலும் முதிர்ச்சியடையும் போது, எல்லாருமே பாவம் செய்வார்கள். *லூக்கா 18:16.* உலகத்தில் வாழும் வளர்ச்சியடைந்த மக்கள் எல்லாருமே ஏன் பாவஞ்செய்து இருக்கிறார்கள் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுவதே இப்பாடத்தின் நோக்கம், முதலாவதாக "பாவம் என்றால் என்ன?" என்பதைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும்.

ஜீவப்பிரமாணத்தை குறிப்பிடும் நோக்கத்திலேயே இங்கு யோவான், **நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்** என்று அறிவிக்கிறான். *1 யோவான் 3:4; 5:17.* தேவன் கடைசியாகக் கொடுத்த உடன்படிக்கையில் இந்தப் பிரமாணத்தையே குறிப்பிடுகின்றார். *எபிரெயர் 8:10-12.* இந்தப் பிரமாணம் இயற்கையின் நியதிக்கு ஒப்பானது; இரண்டுமே வளர்ச்சியின் அற்புதத்தை விவரிக்கின்றன. இதன் தொடர்ச்சியை மற்றொரு பாடத்தில் பார்ப்போம். ஆதாமும், ஏவாளும் முதலாம் உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள். அதில் ஒரு கட்டளையும் உட்பட்டிருந்ததால், இச்செயல் அவர்களுக்குப் பாவமாயிற்று. *ரோமர் 5:14.* இதன் விளைவாக அவர்களுக்கும், அவர்களுடைய

இயல்பின்படி பிறந்த எல்லாருக்கும் ஆவிக்குரிய மரணமும், சரீர மரணமும் ஏற்பட்டன. "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது." *ரோமர் 5:12.* நன்மை, தீமை அறியத்தக்க அறிவு இருப்பதினாலேயே எல்லாரும் பாவஞ்செய்கின்றார்கள். *ரோமர் 3:23.*

நமது பூமிக்குரிய சரீரம் ஆதாமுடைய சாயலில் படைக்கப் பட்டுள்ளது. நாம் மரித்த பிற்பாடு, அது மண்ணுக்குத் திரும்பும், தேவனை விட்டு நாம் பிரிக்கப்படுவதே ஆவிக்குரிய மரணமாகும். *1 யோ. 5:18,19.* நமது ஆவிகள் தேவனிடத்திலிருந்து வந்தபடியால், நாம் தேவனோடே எப்போதும் ஐக்கியமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். இது தான் ஜீவன், இந்த ஐக்கியம் இல்லாவிட்டால், நமக்கு ஜீவன் இல்லை, நாம் மரித்தவர்களாயிருப்போம். கொரிந்து பட்டணத்தில் இருந்த தேவனுடைய சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு அறிவித்தான்: "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." *1 கொரி. 15:22.*

கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவுக்குள்" உயிர்ப்பிக்கப்பட்டு இருக்கிறார் கள். இதையும் நாம் மற்றுமொரு பாடத்தில் படிக்கலாம். வளர்ச்சியடைந்த எல்லா மனிதர்களும் பாவஞ்செய்து, ஆவிக்குரிய வகையில் மரித்துவிட்டது ஏன் என்பதை இப்பாடத்தில் கற்றுக்கொள்வோம்: நாம் எல்லாரும் தேவனை விட்டுப் பிரிந்துபோனது ஏன்? ஒவ்வொரு மனிதனும் பாவியாக மாறுவதும், சரீர மரணமும், ஆவிக்குரிய மரணமும் அடைவதும் ஏன் என்பதை நாம் கற்றுக்கொள்ளப் போகும் வசனங்கள் தெளிவாகப் புரியவைக்கும். பதில் எளிமையானது : **"மனுஷன் நன்மை, தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்."** இதுதான் அதற்கு பதில், இது எப்படி பதிலாகிறது என்பதை இப்பொழுது புரிந்து கொள்வோம்.

பூமியில் உள்ள எல்லா மனிதர்களுமே ஆதாமில் இருந்து வந்தவர்கள்; ஆகையால் "ஆதாமுக்குள்" இருக்கும் எல்லாருமே மரிக்க வேண்டியது அவசியம். *1 கொரி. 15:44-49* பார்க்கவும். "ஆதாமைப் போல நமக்கு விதிக்கப்பட்ட கட்டளையை மீறுவது இல்லை", என்றாலும், நாம் எல்லாருமே வளர்ச்சியடையும் போது பாவஞ்செய்கின்றோம். *ரோமர் 5:14.*





ஆதாமைப் போல நமக்கும் "அறிவும்" பொறுப்புணர்ச்சியும் இருப்பதினாலே இது நிகழ்கின்றது. சரீரப் பிரகாரமான சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள நாம் அறிந்திருக்கிறோம். ஆகையினால், தேவனுடைய நித்திய சமாதானத்தை பெற்றுக்கொள்ளத்தக்கதாய் அழியாமையை தேடும்படி ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களை பவுல் ஊக்குவித்தான். *ரோமர் 2:7; பிலிப்பியர் 1:22,23.*

ஆதாமும், ஏவாளும் உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள்; இதன் விளைவாக, நமக்கு **நன்மை தீமை அறியத்தக்க அறிவு** கிடைத்திருக்கின்றது. பரலோகத்தில் இருந்து வந்த நசரேயனாகிய இயேசுவானவர் தீமையிலிருந்து நன்மையை பகுத்துணரும் "அறிவு" பெற்றிருந்தார். இது தான் நமக்கும், அவருக்கும் இடையில் உள்ள வித்தியாசம், தேவனுடைய சித்தத்தையும், அதன் நன்மையையும் அவர் நன்கு அறிந்திருந்தார். *மத்தேயு 19:17; யோவான் 4:34; 3:19.* அவர் பூமிக்குரிய சரீரத்தில் இங்கு வாழ்ந்த போது, ஒவ்வொரு சூழ்நிலையிலும் நன்மையை தேர்ந்தெடுப்பதற்குப் போராடினார். அவர் சோர்ந்துபோய் பசியாய் இருக்கும் போது கூட இந்தப் போராட்டம் ஓயவில்லை. முதலாவது ஏவாளை வஞ்சித்ததன் மூலமாகவும், பின்னர் ஆதாமை அவன் மனைவியின் சொல்லை கேட்க வைத்ததின் மூலமாகவும், இன்று வரையிலும் சாத்தான் மக்கள் யாவரையும் தன் வசப்படுத்தி வருகிறான். *ஆதி. 3:17; 2 கொரி. 11:3.* அதே போல், மாம்சத்தில் வந்த தேவனுடைய குமாரனையும் வசப்படுத்தி விடலாம் என்று சாத்தான் நம்பிக்கை கொண்டிருந்தான். ஆனால் ஏமாந்து போனான். *மத்தேயு 4:1-11.*

இன்று மனிதர்களாகிய நமக்கு நன்மை தீமை அறியத்தக்க திறன் இருக்கின்றது; ஆகையால், தீமையிலிருந்து நன்மையை பகுத்தறிய கற்றுக்கொள்ளும் பொறுப்பு நமக்கு இருக்கின்றது. தெரிந்துகொள்ளும் சக்தி நமக்கு இருந்தாலும் அதை நாம் தெரிந்துகொள்வதில்லை. இது தான் நமது பிரச்சனை. நாம் சந்திக்கும் எல்லா சூழ்நிலைகளிலும் எதை செய்தால் நன்மை உண்டாகும், எது தீமைக்கு ஏதுவாகும் என்பதை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். கணக்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பு

பிள்ளைகளுக்கல்ல, பெற்றாருக்கே! அப்படியிருப்பினும், சிறுவர்களா யிருக்கும் அவர்கள் வாலிப வயதை அடையும் போது, தேவனுடைய எதிர்பார்ப்பின்படி நன்மை இன்னதென்றும், தீமை இன்னதென்றும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். இந்த வயதில் தான் சாத்தான் தேவனுடைய திறமைமிக்க பிள்ளைகளை கைப்பற்றுகிறான். தேவனுடைய மக்களில் பெரும்பாலானோர் இன்று சாத்தானுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றார்கள். *ஏசாயா 43:6,7.* ஒரு பெருங்கூட்டம் தொலைந்து போன நிலையில் உள்ளது. மீதியானவர்கள் மீட்கப்பட்டு இருக்கின்றார்கள். *ரோமர் 11:5,6.*

இந்த தொடர் பாடங்களை புரிந்துகொள்ள "பெட்டிக்குள் பிறந்தவர்கள்" என்ற அறிமுகப் பகுதியை தயவு கூர்ந்து மீண்டும் ஒருமுறை படியுங்கள். எல்லாருமே பெட்டிக்குள் அடைக்கப்பட்டவர்கள் போல் இருந்து, தங்கள் பெற்றாருடைய நம்பிக்கைக்கு ஏற்ப நன்மை எதுவென்றும், தீமை எதுவென்றும் முடிவு செய்கின்றார்கள். சிறு வயது முதற்கொண்டு பிள்ளைகள் நன்மையைப் பற்றியும், தீமையைப் பற்றியும் ஏராளமான விஷயங்களை தெரிந்துகொண்டு, அவைகளை தங்கள் நீண்ட கால நினைவில் பதியவைத்துக்கொள்கின்றனர். பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த இரண்டு விஷயங்களைப் பற்றியும், தொடர்ந்து அநேகக் காரியங்களை சொல்லித் தருகின்றனர். சிறு பிள்ளைகளுக்குத் தங்கள் ஆரம்ப வயதில் நன்மை தீமை பற்றி தெரியாது என்பதை மோசேயின் வார்த்தைகளால் கற்றுக்கொள்கிறோம். *உபாகமம் 1:39.* தங்கள் பெற்றாரும், மற்றவர்களும் என்ன சொல்கிறார்களோ, அதையே பிள்ளைகள் நம்பி விடுகிறார்கள்.

சிறுவர்கள் வளர வளர, தங்கள் கட்டுப்பாடுகளை தாண்டியும் யோசிக்க ஆரம்பிக்கிறார்கள். சமுதாயத்தில் எது நல்லது, எது கெட்டது என்பதை பள்ளிக்கூடத்திற்குச் சென்று கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறாகள். வாலிப வயதை அடையும் போது, அவர்களுடைய மனமும், மனச்சாட்சியும் பக்குவமடைவதால், தங்கள் முடிவை தாங்களே எடுக்கின்றனர். "எது நல்லது? எது கெட்டது? எது ஜீவன்? எது மரணம்? இந்த கேள்விகளுக்கு





யுகம் யுகமாக பதில்களை கண்டுபிடிக்க முயற்சித்து வருகின்றனர். தேவனுடைய சிந்தனையில் இந்த கேள்விகள் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவைகளாய் இருக்கின்றன. *1 பேதுரு 3:10-12* பார்க்கவும். இதோ, ஜீவனையும், நன்மையையும், மரணத்தையும், தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். *உபாகமம் 30:15.* மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் மக்களிடத்தில் பேசின இந்தக் கடைசி வார்த்தைகள் இந்த விஷயத்தை முக்கியத்துவப்படுத்துகின்றன.

நன்மை, தீமையைக் குறித்து தேவன் அறிவித்துள்ள காரியங்களில் நம்பிக்கை வைக்காத பண்டிதர்கள், இன்றளவிலும் இதைக் குறித்து பல தத்துவங்களை சொல்லிவருகின்றார்கள். இதன் விளைவாக உலகில் இன்று அநேக மக்கள் மனித ஞானத்தால் உண்டாக்கப்பட்ட "வாழ்க்கை பெட்டிக்குள்" அடைபட்டு வாழ்கின்றனர். அந்தப் பண்டிதர்கள் சொன்ன விஷயங்களை மேற்கோள் காட்டுவதை மக்கள் விரும்புகின்றனர். ஆதாமும், ஏவாளும் உடன்படிக்கையை முறித்துப்போட்டதால், அவர்களுக்கு உண்டான "நன்மை, தீமை என்ற அறிவு" மனிதர்கள் எல்லாருக்கும் தொடர்ந்து வருவதே மனுக்குலத்திற்கு மிகப் பெரிய பிரச்சனையாக மாறிவிட்டது. உலகத்தில் "அதிகமாக விற்பனையாகும்" புத்தகமான பரிசுத்த வேதாகமத்தின் மூலம் மக்கள் நன்மை, தீமை பற்றி முழுமையான அறிவை பெற்றுக்கொள்ள முடியும். "பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமை செய்கிறவன் தேவனைக் காணவில்லை" என்று யோவான் சொன்னான். *3 யோ. 11.* பாருங்கள்! வசனம் எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிட்டது!

நமது மனச்சாட்சி பக்குவம் அடைந்த பிற்பாடு, நம்முடைய நடத்தையை அது நியாயந்தீர்த்து உணர்த்துகிறது. இது மனுக்குலம் சந்தித்து வரும் இரண்டாவது பிரச்சனை. நன்மை தீமையைப் பற்றிய நினைவுகள் நமக்குள் நீண்ட காலமாக இருந்து வந்தாலும், நாம் நல்லது என்று நினைக்கின்ற ஒன்றை மீறி செயல்படுகின்றபோது, நமக்குள் நீதிபதியைப் போல் செயல்படுகின்ற மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தும்.

*அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச் சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றை யொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக் கிறார்கள். ரோமர் 2:14,15.*

நமது மனச்சாட்சியே நம்மைக் குறித்து அறிந்துகொள்ள இயற்கையான மனோ சக்தியாய் இருக்கின்றது. நம்மை நாமே பரீட்சித்துப் பார்க்கமுடியும். *2 கொரி. 13:5.* நம்முடைய மனச்சாட்சி நம்முடைய மனதில் பதிந்துள்ள நன்மை, தீமை சம்பந்தமான தகவல்களைச் சார்ந்து இயங்குகின்றது. இதைத்தான் பவுல் மேற்கண்ட வசனங்களில் விளக்கினான். ஒரு நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதுபோல், நம்முடைய மூளைக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தை புசிப்பது தீமை என்று கருதக்கூடிய கிறிஸ்தவனைக் குறித்து *1 கொரி. 8*–ஆம் அதிகாரத்தில் பேசுகிறான். விக்கிரகத்தை வணங்கி அதற்குப் படைக்கப்பட்டதை புசிக்காமல், அதை ஒரு சாதாரண உணவாகப் புசித்தால், தீங்கொன்றும் இல்லை என்று பவுல் கூறுகிறான்; ஆகிலும், “சிலர் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது” வசனம் 7. இந்த சந்தர்ப்பப் பொருளை மனதில் கொண்டு *ரோமர் 14:22,23* வசனங்களை தயவுகூர்ந்து வாசியுங்கள். இந்த விஷயத்தில் எது சரி எது தவறு என்ற சரியான தகவல் தெரியாததினால், பெலவீனமான மனச்சாட்சி உடையவன் “கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருக்கிறான்.”

எது நன்மை எது தீமை என்பதை மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதை சாத்தான் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அநேகரை தவறாக வழிநடத்துகிறான். சாத்தானானவன் உலக





ஞானத்தைக் கொண்டு மக்களைத் தூண்டி நன்மை, தீமை குறித்து கடுமையான உபதேசங்களை போதிக்கச் செய்கிறான். சில புத்திசாலிகள், தாங்கள் செய்ய விரும்பும் காரியங்களை யாரும் கட்டுப்படுத்த விரும்புவது இல்லை. அவர்கள் தத்துவ ஞானிகள் ஆகி விடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த ஞானத்தைப் பயன்படுத்தி எது நல்லது என்று ஒரு பட்டியலையே தங்களுக்குத் தயாரித்துக்கொள்கிறார்கள். இவ் விதமாக தங்கள் கெட்ட நடத்தையை தங்கள் மனச்சாட்சியே குற்றப்படுத்தாதபடிக்கு பார்த்துக்கொள்கின்றனர். தங்களுடைய சொந்தத் தத்துவங்களை சத்திய உபதேசமாக சமுதாயத்திற்கும் வழங்கி, மனுஷர்கள் மத்தியில் ஒரு கவுரவமான இடத்தையும் பிடித்துக்கொள்கின்றனர்.

மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கவலைப்படாத மக்கள், அவர்களுடைய குற்ற மனச்சாட்சியினால் துன்பப்படுவார்கள். “தீமையை நன்மையென்றும் நன்மையைத் தீமையென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ” என்று தேவன் அறிவித்தார். *ஏசாயா 5:20.* அவர்களுடைய புத்தியும், மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள் என்று பவுல் தீத்துவுக்கு கூறினான். *தீத்து 1:15,16.* அவர்களால் தங்களை ஒழுங்காகப் பரீட்சிக்க முடியாது. எவன் ஒருவன் தேவனுடைய வார்த்தையின்படி எது நல்லது, எது கெட்டது என்று சரியான நம்பிக்கையை கொண்டிருக்கிறானோ, அவனால் மட்டுமே தன்னுடைய நடத்தையை ஒழுங்காகக் குற்றப்படுத்திக் கொள்ளவோ, நியாயப்படுத்தவோ முடியும். நாங்கள் சரியானதை தெரிந்துகொள்ளவில்லையென்று புரிந்துகொள்ளும் கிறிஸ்தவர்கள் தங்களைத் தாங்களே குற்றப்படுத்திக்கொள்கிறார்கள். நமக்குள் மனந்திரும்புதல் இடம் பெற்ற பிற்பாடு, தேவனிடம் மன்னிப்பு கேட்கிறோம். எவையெல்லாம் தவறு என்று நம்முடைய உள்ளான மனிதனில் நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.

குற்றமுள்ள மனச்சாட்சியுடன் மனிதனால் வாழவே முடியாது. ஒரு நபர் "தன்னைப் பற்றி கொண்டிருக்கின்ற நல்ல அபிப்பிராயத்தை" குற்ற உணர்வு கெடுத்துவிடும். இந்த நல்ல அபிப்பிராயமே அவனுடைய மகிமையாகும். எல்லா மனிதர்களுக்கும் மகிமையைத் தேடும் உள்ளுணர்வு இருக்கின்றது. தேவனுடைய சக்தி வாய்ந்த பிள்ளைகளில் அநேகரை சாத்தான் இப்படித்தான் கொள்ளையடித்து வைத்திருக்கிறான். அவர்களுக்குள் இருக்கும் மகிமையின் தேவையை நிறைவு செய்வதற்கு வேறுபட்ட வழிகளை அவன் காட்டுகிறான். உலகத்தோற்றத்திற்கு முன்னே நமது மகிமைக்காக தேவன் ஒரு விசேஷித்த திட்டத்தை தம்முடைய மனதில் வைத்திருந்தார். *1 கொரி. 2:7.*

நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நல்லது என்று நாம் நம்புவது எதுவோ, அதை தெரிந்துகொள்ளாமல் போவதினாலேயே நமக்குக் குற்றம் உண்டாகிறது. ஆதாமும், ஏவாளும் தேவனுடைய உடன்படிக்கையை முறித்துவிட்ட பிற்பாடு, குற்ற உணர்ச்சி உண்டானதினாலேயே ஒளித்துக்கொண்டார்கள். தங்கள் குற்ற உணர்ச்சியை போக்கிக்கொள்ளவே ஒருவரையொருவர் குற்றப்படுத்திக் கொள்ளுகிறார்கள். குற்ற உணர்ச்சியினாலேயே காயீன் தன் சகோதரனைக் கொலை செய்தான். மனிதர்களுடைய குற்ற மனச்சாட்சியின் காரணமாகவே இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சியை நீக்க முடியவில்லை. *எபிரெயர் 10:1-10.* நம்முடைய மனச்சாட்சியிலிருந்து குற்ற உணர்வு நீங்கினால், தான் நமக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ண விரும்புவார். *அப்போஸ்தலர் 2:38.*

வாலிபப் பிள்ளைகளுக்கு, அவர்கள் பாவம் உள்ளவர்கள் ஆனார்கள் (அ) பாவம் உள்ளவர்கள் ஆவார்கள் என்பதை சபையின் மூப்பர்களும், பிரசங்கியார்களும், போதகர்களும், கிறிஸ்தவ பெற்றோர்களும் தெரியப்படுத்தவேண்டும். பிள்ளைகள் பிறக்கும்போதே பாவிகளாகப் பிறந்துவிட்டார்கள் என்று சிலர் போதிக்கிறார்கள். இது





தவறான போதனை என்று பிள்ளைகளுக்குப் புரியவைக்கவேண்டும். "ஒரே மனுஷனாலே பாவமும்" பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. *ரோமர் 5:12.* ஆகவே இது அவர்களுடைய குற்றமல்ல. அப்படியிருந்தாலும், ஆதாமை குற்றப்படுத்துவதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. பிள்ளைகள் வாலிபப் பருவத்தை அடையும்போது, தீமையென்று தெரிந்தும் அதை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். தேவனுடைய உபதேசத்தின்படி எது நன்மை எது தீமை என்பதை அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். *எபிரெயர் 5:14.* எது கெட்டது என்பதைக் குறித்த இயேசுவின் உபதேசத்தை வாலிபர்கள் தெரிந்துகொள்ளாவிட்டால், அவர்கள் பெற்றாரோ, மற்றவரோ சொல்லக் கூடிய புத்திமதிகளைவைத்தே நல்லவைகளையும், கெட்டவைகளையும் முடிவுசெய்துகொள்வார்கள். *யாக்கோபு 4:17.* வளர்ச்சியடைந்த எல்லா மனிதரும் தெரிந்துகொள்ளும் நன்மைக்கும், தீமைக்கும் தகுந்தபடி தேவன் கணக்குக் கேட்பார். ஆகையால், நன்மையை குறித்த தேவனுடைய உபதேசத்தின்படி, நம்முடைய நடத்தையை நாம் முடிவுசெய்யவேண்டும். விசுவாசத்தினால் நீதிமானாக்கும் உபதேசத்தைக் கொண்டு கிறிஸ்தவர்களை தேவன் ஆசீர்வதித்து இருப்பதால், நாம் குற்ற உணர்ச்சியினால் துன்பப்படுவது இல்லை. *ரோமர் 4:25; 5:1.*

முதலாவதாக, நன்மை, தீமை குறித்த அறிவை "ஆதாம், ஏவாள் அடைந்துவிட்ட பிற்பாடு "ஜீவ விருட்சத்தை" விட்டு அவர்களை விலக்கி விட்டார். "நன்மை தீமை என்ற அறிவாற்றலால்" எல்லா மனிதர்களுக்கும் நீடித்து வருகின்ற போராட்டம், அவர்கள் சரீர பிரகாரமாக மரிக்கும் போது முடிவுக்கு வருகிறது. எல்லா மனிதர்களும் பாவஞ்செய்துவிட்டார்கள். தேவன் பரிசுத்தராயிருக்கிறார். பாவமும், பரிசுத்தமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகள். ஆகையால் பாவத்தினிமித்தம் தேவன் கோபப் படுகிறார். *ரோமர் 2:8.* ஒரே மனிதனால் உலகத்துக்குள் பாவம் நுழைவதற்கு முன்பு, விசுவாசத்தால் நீதிமானாகவேண்டிய அவசியம் மனிதனுக்கு இருக்கவில்லை. பாவம் நுழைந்த பின்பு விசுவாசத்தால் நீதிமான்கள் ஆக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியலில் ஆபேலின் பெயரும்

சேர்க்கப்பட்டுள்ளது. *எபிரெயர் 11:4.* இரண்டாவதாக, நன்மை தீமை அறியத்தக்க அறிவாற்றலுடன் பூமிக்குரிய சரீரத்தில் மனிதனை என்றென்றும் வாழ விடுவது மிகக் கொடுமையானது. அவர்கள் உடன்படிக்கையை முறித்து விட்டபிற்பாடு சரீர மரணம் ஒரு ஆசீர்வாத மாகவே அவர்களுக்கு உண்டானது. ஆதாமைப் போன்ற சரீரத்தில் வாழ்ந்த போதிலும், ஒரு போதும் தீமையை தேர்ந்தெடுக்காத ஒருவர் உண்டென்றால், அவர் தான் இயேசு. *2 கொரி. 5:21.* நன்மை என்ன, தீமை என்ன என்று கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை. இதுவே அவருக்கும், நமக்கும் இருக்கின்ற வித்தியாசம். அவர் இந்த அறிவை உடையவராய் இருந்த போதிலும், நன்மையை மட்டுமே செய்யவேண்டிய அவசியம் இருந்தது – அவர் அப்படியே செய்தார்.

மனிதனுடைய பண்புகளோடு சாத்தான் தீமையைக் கலந்து மனுக்குலத்தையே கெடுத்துவிட்டான் என்று பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. அவைகளில் சிலவற்றைக் கீழே காணலாம். தேவனைப் பொறுத்தவரை அவர் ஒரு சூழ்நிலையை நல்லது என்று ஏற்றுக்கொள்வார் அல்லது தீமை என்று நிராகரித்து விடுவார்; நடுநிலையாக அவர் எதையும் நினைப்பதில்லை என்பதை தயவுகூர்ந்து கவனியுங்கள். கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மனச்சாட்சி, ஒரு நீதி மன்றத்தைப்போல் செயல்பட்டு நாம் செய்வது சரியென்றால், பச்சை விளக்கு காண்பிக்கிறது; தவறென்றால், சிவப்பு விளக்கு காண்பித்து தடுத்துவிடுகிறது.

நம்முடைய சாலைகளில் குறுக்கே காணப்படும் எச்சரிக்கை விளக்குகளில் இருப்பதைபோல, மஞ்சள் விளக்கு அதில் இருப்பதில்லை; ஒன்று நாம் போகவேண்டும் அல்லது நிற்கவேண்டும், இப்படித்தான் ஒரு ஆரோக்கியமான மனச்சாட்சி வேலைசெய்கிறது. இதைக்குறித்து வேதாகமம் பேசாமலில்லை.

நன்மையைக்குறித்தும் தீமையைக்குறித்தும் யோசேப்பு பேசினான். *ஆதியாகமம் 44:4;50:20.* அவனுடைய சகோதரர்கள் செய்யநினைத்த தீமையை தேவன் இஸ்ரவேலுக்கு நன்மையாக முடியப்பண்ணினார்.





யோசுவா இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் குடியமர்த்தின பின்பு, அவர்கள் நன்மையைத் தேர்ந்தெடுக்காவிட்டால், தேவன் தீமையை பயன்படுத்தி அவர்களை அழித்துவிடுவார் என்று எச்சரித்தான். *யோசுவா 23:15,16.*

“நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமை செய்தான்” என்று தாவீது நாபால் மீது குற்றம் சுமத்தினான். *1 சாமுவேல் 25:21.*

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப், யோசபாத்தை நோக்கி “இவன் என்னை குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன்” என்று மீகாவின் மீது குற்றம் சுமத்தினான். *1 இராஜா. 22:18.*

“நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது; வெளிச்சத்தை வரப்பார்த்துக்கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது” என்று யோபு மனம் நொந்து பேசினான். *யோபு 30:26.*

சங்கீதப்புத்தகத்திலும், நீதிமொழிகள் புத்தகத்திலும் அநேக வசனங்கள், நன்மை தீமையைக்குறித்து பேசுகின்றன.

இவற்றைக்குறித்து ஏசாயா அறிவிப்பதை நாம் பாடத்திலேயே பார்த்துவிட்டோம். *ஏசாயா 5:20; 7:15,16.*

இதைக்குறித்து எரேமியா பல இடங்களில் பேசியிருக்கிறான். அவைகளில் ஒன்று “என் ஜனங்களோ மதியற்றவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள், அவர்களுக்கு உணர்வே இல்லை; பொல்லாப்புச் செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்” என்று தேவன் ஜனங்களைக் குற்றஞ்சுமத்துவதாய் அமைந்துள்ளது. *எரே. 4:22.*

“நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங்களினி

மித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள்" என்று எசேக்கியேல் அறிவித்தான். *எசே. 36:31.*

நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; "நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்" என்று ஆமோஸ் கூறினான். *ஆமோஸ் 5:14,15.*

"யாக்கோபின் தலைவர்களே, இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகளே, நியாயம் இன்னதென்று அறிவது உங்களுக்கு அல்லவோ அடுத்தது. ஆனால் நன்மையை வெறுத்து, தீமையை விரும்பி..." என்று மீகா தீர்க்கதரிசனம் சொன்னான். *மீகா 3:1,2.*

"உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப் படுத்துகிறீர்கள். ஆனாலும் எதினாலே அவரை வருத்தப் படுத்துகிறோம் என்கிறீர்கள். பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே" என்று மல்கியா ஜனங்கள் மீது குற்றஞ்சுமத்துகிறான். *மல்கியா 2:17.*

நன்மை தீமையைக் குறித்து இயேசு பேசின பல விஷயங்களை மத்தேயு பதிவு செய்திருக்கிறான். *மத்தேயு 5:45; 7:11,17,18; 12:34,35; 20:15.*

நன்மை தீமையைக் குறித்து பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பேசியிருக்கிறான். பார்க்கவும் *ரோமர் 3:8;7:19,21; 9:11;12:9; 12:21; 13:3,4; 14:16.* "ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்" *ரோமர் 16:19.*

"ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி





நன்மை செய்து சமாதானத்தை தேடி, அதை பின் தொடரக்கடவன்" என்று சங்கீதக்காரன் கூறியதை பேதுரு மேற்கோள்காட்டுகிறான். *1 பேதுரு 3:10,11.*

இந்தப் பாடத்தின் முக்கியத்துவத்தை நம் மனதில் பதியவைப்பதற் காகவே மேற்கண்ட வசனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. போதகர்களும், பிரசங்கியர்களும் மக்களைப் பார்த்து நீங்கள் பாவிகள் என்று கூறுவதற்கு முன்பு, அவர்கள் ஏன் பாவிகளானார்களென்று விளக்குவது அவசியம். சிறுபிள்ளைகள் பிற்காலத்தில் பாவிகளாக மாறிவிடுவது ஏன் என்று அவர்களுக்குப் போதிப்பது அவசியம். பாவம் என்றால் என்ன என்பதையும், நாம் ஏன் பாவிகளாயிருக்கிறோம் என்பதையும் தெரிந்துகொள்ளும் வரை, நம்மால் பாவத்தை மேற்கொள்ளவே முடியாது. மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் தேவனைப்போல் ஆகாமலிருந்திருந்தால், பரிசுத்தவேதாகமம் எழுதப்படவேண்டிய அவசியம் இருந்திருக்காது. *ஆதியாகமம் 3:22.*